S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1978
Nikon HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

“இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு” திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE வியாழன் ஜனவரி 29 * 2026 * மலர் -1 * இதழ்-240* VOL-1 * ISSUE-240 விலை ரூ.3 * பக்கம் -4

## விமானம் தரையில் விழுந்து தீப்பிடித்தது:

# மராட்டிய துணை முதல்வர் அஜித்பவார் மரணம்!

மும்பை, ஜன 29

தேசியவாத காங்கிரஸ் தலைவரும், மராட்டிய மாநில துணை முதல்வருமான அஜித் பவார், தேர்தல் பிரசாரத்திற்காக இன்று காலை தனது சொந்த ஊரான பாராமதிக்கு தனி விமானத்தில் சென்ற நிலையில் பெரும் விபத்து நேரிட்டது. விமானம் தரையிறங்க முயன்ற போது ஓடுபாதையில் இருந்து விலகி தரையில் மோதி நொறுங்கியது. இந்த கோர விபத்தில் விமானத்தில் இருந்து மீட்கப்பட்ட அஜித் பவார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் சிகிச்சைப் பலனின்றி மரணம் அடைந்தார். அவருடன் பயணித்த இரு விமானிகள், இரு பாதுகாவலர்கள் உள்பட நான்கு பேரும் இந்த விபத்தில் உயிரிழந்தனர். அஜித் பவாரின் மரணம் மராட்டிய மாநிலத்தில் மட்டுமின்றி தேசிய அளவில் பெரும் அதிர்சியை ஏற்படுத்தியுள்ளது.





மராட்டிய மாநிலத்தில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக் கூட்டணியின் ஆட்சி நடைபெற்று வருகிறது. அஜித் பவாரின் தேசியவாத காங்கிரஸ் பா.ஜ.க. கூட்டணியில் அங்கம் வகித்து வருகிறது. தேவேந்திர பட்னாவிஸ் முதல்வராக இருக்கும் நிலையில், சிவசேனையின் ஷிண்டே மட்டுமின்றி தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவர் அஜித் பவார் (வயது 66) துணை முதல்வராக இருந்து வந்தார். மராட்டிய மாநிலத்தில் தற்போது உள்ளாட்சித் தேர்தல் பலகட்டங்களாக நடைபெற்று வரும் நிலையில், அஜித் பவார் தேர்தல் பரப்புரையில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார். அந்த வகையில் தனது சொந்த ஊரான பாரமதியில் நடைபெறும் பொதுக் கூட்டங்களில் பங்கேற்பதற்காக இன்று காலை அஜித் பவார் லியர்ஜெட் 45 என்ற தனி விமானத்தில் புறப்பட்டுச் சென்றார். அவருடன் விமானிகள், பாதுகாவலர்கள், உதவியாளர் உள்பட 5 பேர் இருந்துள்ளனர். பாராமதியில் நான்கு பொதுக் கூட்டங்களில் அஜித் பவார் பங்கேற்றுப் பேச தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்நிலையில் இன்று காலை விமானம் பாராமதி அருகே உள்ள ஓடுபாதையில் தரையிறங்க முயன்ற போது, திடீரென விமானம் விமானியின் கட்டுப்பாட்டை இழந்து ஓடுபாதையில் இருந்து விலகி தரையில் மோதி நொறுங்கியது. பயங்கர சப்தத்துடன் விமானம் நொறுங்கி விழுந்ததில் ஓடுபாதையை ஒட்டிய தாழ்வான இடத்திற்கு தள்ளப்பட்டது. திடீரென விமானத்தில் தீப் பற்றி கடும் புகை கிளம்பியது.

உடனடியாக அப்பகுதியில் இருந்த அதிகாரிகள் மற்றும் உள்ளூரைச் சேர்ந்தவர்கள் துரிதமாக செயல்பட்டு அஜித் பவாரை மீட்க தேவையான நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கினர். கடும் புகை மூட்டத்திற்கு நடுவே அஜித் பவார் போராடி மீட்கப்பட்ட நிலையில், அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். உடலில் பலத்த காயங்களுடன் அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப் பட்டதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் மருத்துவமனையில் உயிருக்குப் போராடிய அஜித் பவாரை காப்பாற்ற மருத்துவர்கள் தீவிரமாக போராடியுள்ளனர். எனினும் அஜித் பவார் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்து விட்டனர். அஜித் பவார் விமான விபத்தில் உயிரிழந்த செய்தியை அதிகாரிகள் சிலர் உறுதி செய்தனர். இந்த கோரமான விமான விபத்தில் அஜித் பவாருடன் பயணித்த இரு விமானிகள் மற்றும் இரு பாதுகாவலர்களும் உயிரிழந்து விட்டனர். அஜித் பவாரின் மரணம் குறித்த செய்தி மராட்டிய மாநிலத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. விமானத்தை அவசரமாக தரையிறக்க முயன்ற போது தரையில் மோதி நொறுங்கியதாக நேரில் பார்த்த பலரும் கூறியுள்ளனர்.

எனினும் இந்த சம்பவம் தொடர்பாக, விரிவான விசாரணை நடத்தப்படும் என்று மத்திய விமான போக்குவரத்து இயக்குனரகம் கூறியுள்ளது. தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்த விபத்து நடந்ததா அல்லது மோசமான வானிலை காரணமா என்பது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அஜித் பவாரின் மரணத்தைத் தொடர்ந்து மராட்டிய மாநிலம் முழுவதும் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அசம்பாவிதங்களைத் தடுக்க மாநிலம் முழுவதும் போலீசார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டு வருகிறது. தேசியவாத காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரான சரத் பவாரின் அண்ணன் மகனான அஜித் பவார் அந்த கட்சியில் முக்கிய தலைவராக செயல்பட்டு வந்தார். இந்நிலையில் திடீரென கட்சியில் பிளவை உண்டாக்கிய அஜித் பவார், ஆளும் பா.ஜ.க. – சிவசேனை கூட்டணி அரசில் இணைந்ததுடன் மாநில துணை முதல்வராக பதவியேற்றார். இதன் காரணமாக, தேசியவாத காங்கிரஸ் கட்சி சரத்பவார் அணி, அஜித் பவார் அணி என இரண்டாக உடைந்தது. தேசியவாத காங்கிரஸ் கட்சியின் பெயர் மற்றும் சின்னத்திற்கு இருதரப்பும் உரிமை கோரின. எனினும், அஜித்பவார் தலைமையிலான அணி தான் உண்மையான தேசியவாத காங்கிரஸ் கட்சி என்று தேர்தல் ஆணையம் அறிவித்ததுடன், அக்கட்சியின் சுவர் கடிகாரம் சின்னத்தையும் அஜித்பவார் அணிக்கே வழங்கியது. மராட்டியத்தில் அஜித் பவாருக்கு தாதா என அடைமொழியிட்டு மக்கள் அன்புடன் அழைத்து வந்தது குறிப்பிடதக்கது. கடந்த சில ஆண்டுகளில் அரசியலில் பல உயரத்தை கண்ட அவர் இன்று அகால மரணம் அடைந்தது பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் ஒன்றியத்துக்குட்பட்ட தொட்டியபட்டியில் ரூ.80.23 லட்சம் மதிப்பீட்டில் (தாட்கோ) கிராம அறிவு மைய கட்டிடம் கட்டுவதற்கு அமைச்சர் மதிவேந்தன் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் ராஜேஷ்குமார் ஆகியோர் அடிக்கல் நாட்டினர். இதில் வெண்ணந்தூர் ஒன்றிய செயலாளர் துரைசாமி, மாவட்ட பிரதிநிதி சத்தியமூர்த்தி, தகவல் தொழில்நுட்ப தொகுதி அமைப்பாளர் ரவீந்தர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம், சிலுவைப்ப்டி மொட்டைக்கோபுரம் கடலில் மூழ்கி உயிரிழந்த மாப்பிளையூரணி கிராமத்தைச் சேர்ந்த 3 சிறுவர்களின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறி முதல்வர் ஸ்டாலின் அறிவித்த தலா ரூ.3 லட்சத்தை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் சிறுவர்களின் பெற்றோர்களிடம் வழங்கினார். உடன் சண்முகையா எம்.எல்.ஏ., வருவாய் கோட்டாட்சியர் பிரபு மற்றும் பலர் உள்ளனர்.

## வரலாற்றில் முதல் முறையாக

# வெள்ளி விலை கிராம் ரூ.400 ஆனது!

## தங்கம் விலையும் பவுனுக்கு ரூ.2,960 உயர்வு!!



சென்னை, ஜன. 29–

தங்கம்–வெள்ளி விலைகள் தொடர்ந்து படுவேகத்தில் உயர்ந்து கொண்டிருக்கின்றன. வெள்ளி முதல் முறையாக கிராம் ரூ.400–ஐ எட்டியது. மஞ்சள் உலோகம் தங்கமும், வெள்ளை உலோகம் வெள்ளியும் ஒட்டிப் பிறந்த சகோதரிகளாக உள்ளன. இவற்றின் விலைகள் மிகக் கடுமையாக உயர்ந்து வருகின்றன. உலகப் பொருளாதாரத்தில் சந்தைமயமாக்கல் முறை வந்த பிறகு தங்கத்தின் விலை மட்டுமே மின்னல் வேகத்தில் உயர்ந்து வந்தது. அதுவும் உக்ரைன்–ரஷ்யா போர், காசா போர் ஆகியவை நடந்த சமயத்தில் தங்கத்தின் விலை தான் தினமும் உயர்ந்து வந்தன. அமெரிக்க அதிபராக டொனால்டு டிரம்ப் பதவியேற்ற பிறகு அவரது அதிரடி நடவடிக்கைகளாலும் தங்கத்தின் விலை உயர்ந்தது. ஆனால் வாகன பேட்டரி தயாரிப்பதிலும், தகவல் தொழில் நுட்பத்துறையில் ஏ.ஐ. தொழில்நுட்ப சாதனம் தயாரிப்பதிலும் வெள்ளியின் பயன்பாடு அதிகரித்ததையடுத்து அதன் விலையும் இப்போது மின்னல் வேகத்தில் உயர்ந்து வருகிறது. இன்று ஒரு கிராம் வெள்ளி விலை ரூ.400 ஆகும். இன்று மட்டுமே ரூ.13 அதிகரித்துள்ளது. இது ஒரு வரலாற்று உச்சமாகும். அதைப்போல தங்கத்தின் விலையில் பவுனுக்கு ரூ.2,960 அதிகரித்தது. இதன்மூலம் இன்று ஒரு பவுன் விலை ரூ.1, 22, 640 ஆகும். ஒரு கிராம் விலை ரூ.15,330 ஆகும்.



தாராபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினார். அருகில் நகராட்சி தலைவர் பாப்புகண்ணன், தி.மு.க. நகர செயலாளர் முருகானந்தம், கொளத்துப்பாளையம் பேரூராட்சி துணைத்தலைவர் கே.துரைசாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம், பூலாங்கால் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வளாகத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் நடைபெற்ற 26–வது பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமை அமைச்சர் தங்கம் தென்னரசு தொடங்கி வைத்தார். அருகில் கலெக்டர் சுகபுத்ரா மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.



அருப்புக்கோட்டை தொகுதிக்கு உட்பட்ட சேது ராஜபுரத்தில் 3.50 கோடி மதிப்பீட்டில் மூன்று கண்மாய்கள் புனரமைக்கும் பணியை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் தொடங்கி வைத்தார் .

# விஜய் தலைமையில் புதிய அணி உருவாகிறது!

## ராமதாஸ், கிருஷ்ணசாமி சேர பரிசீலனை; சீமானுக்கும் அழைப்பு விடுத்ததாக தகவல்!!

சென்னை, ஜன. 29–

தமிழக அரசியல் களத்தில் நீண்ட காலமாக தி.மு.க.– அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகளுக்கிடையே தான் நேரடி மோதல் இருந்து வந்தது. இந்த இரு கட்சிகளின் தலைமைகளில் தான் கூட்டணிகளும் உருவாகின. ஒரு சில தேர்தலில் மட்டும் 3–ஆவது அணிகள் தோன்றியுள்ளன. ஆனால் அந்த அணிகளால் எந்த திருப்பத்தையும் ஏற்படுத்த முடியவில்லை.

இப்படிப்பட்ட நிலையில் தமிழக சட்டசபை தேர்தல் இன்னும் 3 மாதத்தில் நடக்க உள்ளது. இதை சந்திக்க எல்லா முக்கிய கட்சிகளும் தயாராகி வருகின்றன. தி.மு.க. எப்படியாவது ஆட்சியை தக்க வைத்துக் கொள்ள முனைப்பு காட்டி வருகிறது.

அதேநேரத்தில் இந்த ஆட்சியை எந்த வகையிலும் அகற்றுவோம் என அ.தி.மு.க., பா.ஜ.க. தலைவர்கள் கூறி வருகிறார்கள். வழக்கம் போல தி.மு.க.–அ.தி.மு.க. தலைமைகளில் இந்த முறையும் பெரிய அணிகள் மோத உள்ளன. நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான், அவர் கட்சித் தொடங்கிய நாள் முதலே தனித்தே போட்டியிட்டு வருகிறார். இந்த முறையும் தனித்தே நிற்போம் என கூறி வருகிறார். கிட்டத்தட்ட 2 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் அவரிடம் எந்த கட்சியும் சேரவில்லை. கூட்டணி அரசு என்ற வார்த்தையை பல முறை கூறினார். காங்கிரஸ் கட்சி வரும் என்று நம்பினார். ஆனால் காங்கிரஸ் கட்சி அவர் பக்கம் செல்வதாக இல்லை. அதனால் தான் கூட்டணி இல்லாவிட்டாலும் தனித்து நின்று வெற்றி பெறும் கெத்து நம்மிடம் இருப்பதாக சமீபத்தில் மாமல்லபுரத்தில் நடந்த செயல்வீரர்கள் கூட்டத்தில் விஜய் குறிப்பிட்டார். ஆகவே அரசியல் களத்தில் அவர் தனித்து விடப்பட்ட நிலைக்கு சென்றிருப்பதாக அரசியல் வல்லுநர்கள் கருத்து தெரிவித்தனர். ஆனால் இன்னும் எந்த கூட்டணியிலும் சேராத சில கட்சிகள் உள்ளன. அவை விஜய் கட்சியுடன் கூட்டணி வைக்க தீர்மானித்திருப்பதாக தெரிகிறது. அந்த வகையில் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், புதிய தமிழகம் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி ஆகியோர் விஜய் பக்கம் செல்ல இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானுக்கு விஜய் அழைப்பு விடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் அவர் இந்த அணியில் சேருவாரா என்பது கேள்விக் குறியாக உள்ளது. தொடக்கத்தில் விஜய் கட்சி தொடங்குவதை சீமான் வரவேற்றார். பின்னர் விமர்சனம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் சார்பில் HPV (Human Papilloma Virus) தடுப்பூசி செலுத்தும் திட்டத்தினை துவக்கி வைத்ததை தொடர்ந்து, தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், பாளையம்புதூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் HPV (Human Papilloma Virus) தடுப்பூசி செலுத்தும் திட்டத்தினை தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், , தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி முன்னிலையில் துவக்கி வைத்து, HPV தடுப்பூசி செலுத்திக்கொண்ட பள்ளி மாணவியர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்கள். உடன் அரசு தருமபுரி மருத்துவக் கல்லூரி முதல்வர்டி.எம்.மனோகர், இணை இயக்குநர் (நலப்பணிகள்)எம்.சாந்தி, துணைஇயக்குநர்சுகாதாரம்இராஜேந்திரன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஐ.ஜோதி சந்திரா குழந்தைகள் நல மருத்துவர்காந்தி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் வெ.லோகநாதன், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மருத்துவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# தாராபுரம் கிராம சபை கூட்டத்தில் கிராம மக்கள் திடீர் தர்ணா!

தாராபுரம், ஜன.29

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அருகே உள்ள சங்கரண்டாம்பாளையம் கிராமத்தில் உள்ள ஊராட்சி மன்ற அலுவலகத்தில் கிராம சபை கூட்டம் துணை பி டி ஓ கதிர்வேல் தலைமையில் ஊராட்சி செயலர் ஸ்டாலின் பிரபு முன்னிலையில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் வடுகபாளையம் கிராமத்தில் இச்சிப்பட்டி கிராமத்தில் 55 ஏக்கர் பரப்பளவில் கௌரி ஸ்டீல் என்ற இரும்பு உருக்கு ஆலை நிறுவனம் செயல்பட்டு வருகிறது.கௌரி ஸ்டீல்ஸ் இரும்பு ஆலைக்கு எதிராக கிராமசபைகூட்டத்தில்இரும்பாலையை அகற்ற வேண்டும் என வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தி விவசாயிகள் மற்றும் கிராம மக்கள் திடீரென ஊராட்சி மன்ற அலுவலகத்தில் திடீரென அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சம்பவத்தை அறிந்த குண்டடம் பிடிஓ நாகலிங்கம் மற்றும் துணை பி டி ஓ முருகன் சம்பவ இடத்திற்கு வந்து ஊராட்சி மன்ற அலுவலகத்தில் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.சம்பவத்தை அறிந்த ஊதியூர் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். நடைபெற்ற பேச்சுவார்த்தையில் நேற்று நடந்த கிராம சபை கூட்டத்தில் கௌரி ஸ்டீல் என்ற இரும்பு உருக்கு ஆலையை அகற்ற வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மாவட்ட கலெக்டருக்கு அனுப்பி வைத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது தொடர்பாக தீர்மான நகலை மாவட்ட கலெக்டருக்கு அனுப்பி வைத்தனர். இதனை ஏற்றுக் கொண்ட விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் சம்பவ இடத்திலிருந்து கலைந்து சென்றனர்.

கௌரி ஸ்டீல்ஸ் எதிர்ப்பு இயக்கத்தின் சார்பில் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



# புதுக்கோட்டை அருகே அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கம் சார்பில் கோரிக்கை ஆர்ப்பாட்டம்!

புதுக்கோட்டை,ஜன.29

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கம் சார்பில் நான்கு அம்ச கோரிக்கையை வலியுறுத்தி வட்டாட் சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்திற்கு வட்டத் துணைத் தலைவர் கருப்பையா அனை வரையும் வரவேற்றார்.ஆலங்குடி வட்டக்கிளை தலைவர் ராஜசே கர் தலைமை தாங்கினார். வட்டச் செயலாளர் கந்தசாமி வட்ட பொ ருளாளர் தங்கராசு,ஆறுமுகம்,செல்வம்,திருச்செல்வம், முண்டன், மாரிமுத்து ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் அனைத்து ஓய்வுதியர் சங்கம் தோழமை சங்கம் ஒன்றுபட்டு வெற்றி பெறுவோம். 70 வயது நிறைவு பெற்ற ஓய்வூதி யதாரர்களுக்கு 10% கூடுதல் ஊதியம் வழங்க வேண்டும்.

அங்கன்வாடி பணியாளர்களுக்கு சத்துணவு அமைப்பாளருக்கும் குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ.7.850 வழங்கிடு. ரத்து செய் ரத்து செய் வேலிடேஷன் சட்டத்தை ரத்து செய்,நீக்கிடுக நீக்கிடுக மருத்துவ காப்பீட்டி உள்ள குறைகளை நீக்கிடுக. போன்ற கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

புதுக்கோட்டை மாவட்ட துணை தலைவர் ஜெயபாலன் புதுக்கோ ட்டை மாவட்ட இணைச்செயலாளர் ராஜமாணிக்கம் ஆகியோர்நான்காம்சகோரிக்கை வலியுறுத்தி சிறப்பு ஏற்றினார்கள்.

தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்தபடி அகவை 70 நிறைவு செய்த வர்களுக்கு 10% கூடுதல் ஓய்வூதியம் வழங்கிடு.

தொகுப்பூதியம் பெ ரும் அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் சத்து ணவு பணியாளர்கள் மற்றும் கிராம உதவியாளர்கள் குறைந்த பட் சம் ஓய்வூதியம் ரூ. 7.850 வழங்கிடு.

மருத்துவ காப்பீட்டு திட்ட குளறுபடிகளை நீக்கி,காசில்லா மருத்துவத்தை உறுதிப்படுத்துக.கம்யூட்டேசன் 11 க குறைத்திடு. போன்ற நான்கு அம்சா கோஷங்கைகளை வலியுறுத்தி ஆர்ப் பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

ஆர்ப்பாட்டத்திற்கு ஆலங்குடி,கீரமங்கலம்,வடகாடு திருவரங்குளம், நெடுவாசல் ஆகிய பகுதிகளை சேர்ந்த அனைத்து அரசு ஓய்வு பெற்ற அலுவலர்கள் மற்றும் திருவாளர்கள் வாழ்த்துரைகளை வழங்கி கலந்து கொண்டு சிறப்பித்தனர்.வெண்ணாவல்குடி நில அளவைத்துறை ராமதாசு நன்றி கூறினார்.

## பல ஆண்டுகாலக் காத்திருப்பு:

# பயன்பாட்டிற்கு வராமல் பாழாகும் போச்சம்பள்ளி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள பொதுமக்கள் கழிவறை!



கிருஷ்ணகிரி, ஜன.29

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் கட்டி முடிக்கப்பட்டு பத்து ஆண்டுகளாகியும் திறக்கப்படாமல் பூட்டியே கிடக்கும் கழிவறை கட்டிடத்தால், பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். போச்சம்பள்ளி வட்டாட்சியர் அலுவலக வளாகமானது தாலுகா அலுவலகம் மட்டுமல்லாது, சார்நிலை கருவூலம், அரசு கணினி மையம், ஆதார் சேவை மையம் உள்ளிட்ட மிக முக்கிய அரசு அலுவலகங்களை உள்ளடக்கியது. இதனால் தினமும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள், முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பல்வேறு தேவைகளுக்காக இங்கு வந்து செல்கின்றனர்.பொதுமக்களின் வசதிக்காக சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பே இங்கு கழிவறை கட்டிடம் கட்டப்பட்டது. ஆனால், கட்டப்பட்ட நாள் முதல் இன்று வரை இந்த கழிவறை மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்படவில்லை என்பது தான் வேதனையான உண்மை.நீண்ட நாட்களாக பூட்டிக் கிடப்பதால், கட்டிடத்தைச் சுற்றி ஆள் உயரத்திற்கு முட்புதர்கள் மண்டி கிடக்கின்றன.கட்டிடத்தின் படிக்கட்டுகளை மரக்கிளைகளும் காய்ந்த இலைகளும் முழுவதுமாக மூடியுள்ளன. உள்ளே இருக்கும் பீங்கான்கள் மற்றும் இதர உபகரணங்கள் பழுதடைந்து, சிலந்தி வலைகள் பின்னி பாழடைந்து வருகின்றன.இந்த கட்டிடம் எவ்வளவு நிதி ஒதுக்கீட்டில் கட்டப்பட்டது? யார் ஒப்பந்ததாரர்? போன்ற எந்தத் தகவலும் அடங்கிய பெயர்ப்பலகை கூட அங்கு வைக்கப்படவில்லை என்பது சமூக ஆர்வலர்களின் குற்றச்சாட்டாக உள்ள அரசுப் பணத்தில் கட்டப்பட்ட கட்டிடம் இப்படிப் பாழாவது மக்கள் வரிப்பணத்தை வீணாக்குவதற்குச் சமம். இயற்கை உபாதைகளுக்காக ஒதுங்குவதற்கு இடமில்லாமல் பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் படும் அவதி படுகின்றனர்," என அப்பகுதி சமூக ஆர்வலர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.கட்டிமுடிக்கப்பட்டும் காட்சிப் பொருளாகவே நிற்கும் இந்த கழிவறையை உடனடியாகச் சீரமைத்து, மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து விட வேண்டும் என்பதே மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்களின் ஒட்டுமொத்த கோரிக்கையாக உள்ளது. மாவட்ட நிர்வாகம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுப்பார்களா? என்று மாற்றுத்திறனாளிகள் பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் கோரிக்கையாக உள்ளது.



திருப்பூர் கிழக்கு மாவட்ட மாணவர் அணி மற்றும் கொளத்துப்பாளையம் பேரூர் கழகம் சார்பில் திருப்பூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர், இல. பத்மநாபன் தலைமையில் நடைபெற்ற மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்ட நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். மனித வள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ்,மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



# பாலக்கோட்டில் குடியரசு தின விழாவை முன்னிட்டு முன்னாள் முப்படை ராணுவ வீரர்களின் ஊர்வலம்!

பாலக்கோடு, ஜன.29

தர்மபுரி மாவட்டம், பாலக்கோட்டில் முன்னாள் ராணுவ வீரர் நல சங்கம் சார்பில் 77வது குடியரசு தின விழா தலைவர் கிருஷ்ணன் தலைமையில் கொண்டாடப்பட்டது.

கவுரவ தலைவர் பொன்னுசாமி, செயலாளர் முனுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வணிகர் சங்க தலைவர் முத்து, பாஜக மாவட்ட அணி துணைத் தலைவர் சிவா, டாக்டர்.கலாம் அறக்கட்டளை தலைவர் முருகன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு முன்னாள் முப்படை ராணுவ வீரர்களின் அணிவகுப்பு ஊர்வலத்தை தொடங்கி வைத்தனர். பாலக்கோடு அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தொடங்கிய ஊர்வலமானது ஜெய்ஹிந்த், வந்தே மாதரம், பாரத் மாதா கீ ஜெய் என்ற முழக்கமிட்டு கடைவீதி, ஸ்தூபி மைதானம் வழியாக காவல் நிலையம் வரை சென்று தேசபக்தி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்நிகழ்ச்சியில் முன்னாள் ராணுவவீரர்கள், வணிக சங்கத்தினர், தன்னார்வலர்கள் பொதுமக்கள், பள்ளி மாணவர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# மத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நுகர்வோர் குழு காலாண்டு கூட்டம்!



கிருஷ்ணகிரி, ஜன.29

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த மத்தூர் பி.டி.ஓ. அலுவலகத்தில் நுகர்வோர் பாதுகாப்பு காலாண்டு கூட்டம் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தினேஷ் குமார் உத்தரவின் பேரில் மத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) உமா தலைமையில் முன்னதாக வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) செல்லக் கண்ணால் வரவேற்று நுகர்வோர் குழு கூட்டம் நடந்தது. இதில் சமூக நுகர்வோர் பாதுகாப்பு நல சங்க மாநில பொது செயலாளர் சந்திரமோகன் கலந்து கொண்டு பேசுகையில் மத்தூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள ரேஷன் கடைகள் சரியாக திறப்பதில்லை, அதில் வினியோகிக்கப்படும் அரிசி கள்ள மார்க்கெட் வியாபாரிகளுக்கு விற்பது குறித்தும், மத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள அங்கன்வாடி மற்றும் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் முட்டைகள் வழங்கப்படுவது இல்லை என்ற புகார் உள்ளது.அதேபோல் அரசு பள்ளிகளில் இன்னும் கழிப்பிட வசதிகள் இல்லாமல் மாணவ மாணவிகளின்மிகவும்சிரமத்திற்கு ஆளாகி வருவதை தடுத்திட வேண்டும், சுற்று வட்டார கிராமங்களில் அடிக்கடி மின்வெட்டு செய்வதாகவும் இதனால் பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள், பொதுமக்கள், வியாபாரிகள் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். சாலைகளில் அதிகளவு நாய்கள் சுற்றி திரிவதால் விபத்துகள் ஏற்படுகிறது. அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசு மருத்துவமனைகளில் சரியாக நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுவதில்லை. குறிப்பாக பிரசவத்திற்கு வரும் பெண்களிடம் அதிகளவு பணம் வசூலிக்கும் நிலை உள்ளது. அதேபோல் கிராமங்களில் கள்ளத்தனமாக மது, கஞ்சா விற்பனை செய்யப்படுகிறது. போலீஸ் ஸ்டேசனில் கொடுக்கும் புகார் மனு மீது விசாரிக்க கால தாமதம் ஏற்படுகிறது. உள்ளிட்டவைகள் குறித்து அந்தந்த சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொண்டு. மேலும் பல்வேறு தீர்மானங்கள் அடங்கிய மனுவினை வட்டார வளர்ச்சி அலுவலரிடம் கொடுக்கப்பட்டது.






# ராமகிருஷ்ணா நல்லமை பாலிடெக்னிக் கல்லூரியில் 25 வது ஆண்டு வெள்ளி விழா!

தாராபுரம், ஜன.29

ராமகிருஷ்ணா நல்லமை பாலிடெக்னிக் கல்லூரி, தாராபுரத்தில் 1997–2000 கல்வியாண்டு படித்த முன்னாள் மாணவர்கள், தங்கள் கல்வி பயணத்தின் 25 ஆண்டுகளை நினைவுகூரும் வெள்ளி விழா (Silver Jubilee Reunion) நிகழ்ச்சியை கல்லூரி வளாகத்தில் சிறப்பாகவும் நினைவுகூரத்தக்க வகையிலும் கொண்டாடினர்.கால் நூற்றாண்டுக்குப் பிறகு தங்கள் கல்வி நிலையத்தில் ஒன்று கூடிய முன்னாள் மாணவர்கள், ஒற்றுமை, நினைவுகள் மற்றும் நன்றியுணர்வு நிறைந்த சூழலில் இந்த நிகழ்ச்சியை கொண்டாடினர்.மாணவ வாழ்க்கையின் இனிய தருணங்களை அவர்கள் நினைவுகூர்ந்ததுடன், தங்களின் தொழில்முறை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்த கல்வி நிறுவனம் மற்றும் ஆசிரியர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்தனர்.இந்த நிகழ்ச்சியில் அனைத்து முன்னாள் மாணவர்களும் உற்சாகத்துடன் கலந்து கொண்டு, பரஸ்பர உறவுகளை மேலும் வலுப்படுத்தி, கல்வி நிறுவனத்துடனான தங்களின் பிணைப்பை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் நிகழ்ச்சி வெற்றிகரமாக நிறைவடைந்தது.



## உயிர்ப்பலியைத் தவிர்க்குமா மின்சார வாரியம்?

# போச்சம்பள்ளி அகரம் கூட்ரோட்டில் அபாயகரமான மின்பெட்டி! பொதுமக்கள் அச்சம்!!

கிருஷ்ணகிரி, ஜன.29

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த அகரம்கூட்ரோடு பகுதியில், மின்சாரகம்பத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள மின்சார மீட்டர் பெட்டி மிகவும் பழுதடைந்து காணப்படுவதால், அப்பகுதியில் பெரும் விபத்து ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அகரம் கூட்ரோடு பகுதி எப்போதும் மக்கள்நடமாட்டம் மிகுந்த மையப்பகுதியாகும். நாள்தோறும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள், பள்ளி மாணவர்கள் மற்றும் பயணிகள் இந்தப் பகுதியைக் கடந்து செல்கின்றனர். இங்குள்ள ஒரு மின்சார கம்பத்தின் அடியில் பொருத்தப்பட்டுள்ள மீட்டர்பெட்டி முறையானபராமரிப்பின்றிதுருப்பிடித்து, திறந்த நிலையில் பழுதடைந்து காணப்படுகிறது. தற்போது நிலவும் சீரற்ற காலநிலை மற்றும் மழைக்காலங்களில், இந்தப் பெட்டியின் வழியாக மின்சாரம் கசியும் சூழல் உள்ளது. துருப்பிடித்த பெட்டியின் வழியாக மின்சாரம் கம்பத்தில் அல்லது தரையில் பாயும் நிலை ஏற்பட்டால், அந்தப் பகுதியில் செல்லும் பொதுமக்களுக்கு மின் விபத்து ஏற்படக்கூடும் என சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதுகுறித்து அப்பகுதி சமூக ஆர்வலர் T.V. சேகர் கூறுகையில், "மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இந்த இடத்தில் மின்சார பெட்டி பாதுகாப்பற்ற நிலையில் இருப்பது பெரும் கவலையளிக்கிறது. எந்த நேரத்திலும் உயிர்ச்சேதம் ஏற்படலாம் என்ற அச்சம் நிலவுகிறது. எனவே, மின்சார வாரியம் அசம்பாவிதங்கள் நடக்கும் முன், போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு பழுதடைந்த மின்பெட்டியை அகற்றிவிட்டு, புதிய மற்றும் பாதுகாப்பான மின்பெட்டியை நிறுவ வேண்டும்" என வலியுறுத்தியுள்ளனர்.



வாணியம்பாடி அடுத்த மதனாஞ்சேரி ஊராட்சி சரவணன் பிரதர்ஸ் கபடி அணி வீரர்கள் கோரிக்கையை ஏற்று ஆலங்காயம் மேற்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ். ஞானவேலன் இரவு மின்னொளி ஏற்பாடு செய்த பின்னர் கபடி போட்டிகள் நடைபெற்றது. நிகழ்ச்சியில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஞானசேகரன் மற்றும் கிளை கழக செயலாளர் ஜெயச்சந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



## குடியரசு தின விழா தொடர் விடுமுறை:

# ஒகேனக்கல்லில் சுற்றுலா பயணிகள் குவிந்தனர்!

### அருவியில் குளித்து உற்சாக பரிசல் பயணம்!!

**பென்னாகரம், ஜன.29–**

குடியரசு தின விழா தொடர் விடுமுறை என்பதால் ஏராளமான சுற்றுலா பயணிகள் ஒகேன க்கலில் குவிந்துள்ளனர்.

தமிழகத்தின் முக்கிய சுற்றுலாத்தலமான ஒகேனக்கல்லுக்கு கர்நாடகா, ஆந்திரா, கேரளா, புதுச்சேரி உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்தும், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்வார்கள். இந்த நிலையில் நேற்று ஒகேனக்கலுக்கு நீர் வரத்து 1000கன அடியாக இருந்தது.

இங்கு சுற்றுலா பயணிகள் அருவியில் குளித்தும், பரிசலில் சென்றும் மகிழ்வர். இதனிடையே நேற்று குடியரசு தின விழாதொடர் விடுமுறை மற்றும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்பதால் ஏராளமான சுற்றுலா பயணிகள் ஒகேனக்கல்லில் குவிந்தனர். அவர்கள் எண்ணெய் மசாஜ் செய்து கொண்டு மெயின் அருவி, சினி பால்ஸ் மற்றும் காவிரி ஆற்றின் பல்வேறு இடங்களில் குளித்து மகிழ்ந்தனர்.

பின்னர் அவர்கள் குடும்பத்தினர், நண்பர்களுடன் பாதுகாப்பு உடை அணிந்து பாறைகளுக்கு இடையே காவிரி ஆற்றில் உற்சாகமாக குடும்பத்துடன் பரிசல் சவாரி செய்து மகிழ்ந்தனர்.

ஒகேனக்கல்லில் சுற்றுலா பயணிகள் குவிந்ததால் நடைபாதை, பேருந்து நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டமாகவே காணப்பட்டது.

# மொரப்பூரில் கிராம நிர்வாக அலுவலகத்தை சீரமைக்க கோரிக்கை!



**அரூர், ஜன.29–**

தருமபுரி மாவட்டம் மொரப்பூரில் குடியரசு தின விழாவையொட்டி சிறப்பு கிராம கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்தில் மொரப்பூர் பகுதியை சார்ந்த பொதுமக்கள் அடி ப்படை தேவைகளான குடிநீர் சாக்கடை கால்வாய் அரூர் மொரப்பூர் சாலையில் உள்ள மே ம்பாலத்தில் மின் விளக்கு பழுதாகியுள்ளதை சரி செய்யவேண்டும் ஆங்காங்கே தேங்கியுள்ள கழிவுநீரை அகற்ற வேண்டும் கிராம நிர்வாக அலுவலகத்தை சீரமைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கிராம சபை கூட்டத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ராமு வருவாய் ஆய்வாளர் பொன்னுசாமி ஆகியோரிடம் மொரப்பூர் விசிக ஒன்றிய செயலாளர்வைதிருலோகன்தலைமையில் பொதுமக்கள்

மனு அளித்தனர் இந்நிகழ்ச்சியில் கிராம நிர்வாக அலுவலர் சிலம்பரசன் மற்றும் ஓய்வுபெற்ற ரயில்வே ஊழியர் உலகநாதன்

முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் சுதாதருமன் சி.வேலுமணி தீத்தான் மணி சம்பத்குமார் கலைநாதன் ஆசிரியர் பெப்ஸிபிரபு ஆதவன் அம்பேத்கர் கார்த்திகேயன்தமிழரசன்சிவாஜி நேரு அமுதா அகிலன் ஸ்ரீதேவி சிந்து மணி ரேஷ்மா பழனி சரிதா இளமதி சங்கீதா தீபிகா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமும் படியுங்கள் உள்ளாட்சி அரசு



தாராபுரம் வடதாரை அனுஸ்ரீ SPS நண்பர்கள் நடத்திய 48 அணிகள் பங்கு பெற்ற இந்த கபடிபோட்டியில்தாராபுரம் மீனாட்சிபுரம் பாலையாநினைவுகபடிகுழு முதல்பரிசு ரூ.30000 மற்றும் அதற்கு இணையான பரிசு கோப்பையை வென்றது இரண்டாம் பரிசை மாயவன் நினைவு கபடி குழு ரூ.25000 மற்றும் அதற்கு இணையான கோப்பை மூன்றாம் பரிசை RVS தாரை அணியினரும் ரூ.15000 அதற்கு இணையான கோப்பை நான்காம் பரிசை திருச்சி கிராமிய sports ரூ.10000 மற்றும் அதற்கு இணையான கோப்பை வென்றது.

# கோவை காமாட்சிபுரி ஆதீனம் மாபெரும் குண்டம் திருவிழா!



**கோவை, ஜன.29**

கோவை காமாட்சிபுரி ஆதீனம் 51 சக்தி பீடம் மகா சக்தி ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அன்னையின் 45 ஆம் ஆண்டு திருக்கல்யாணம் மகா உற்சவம் மற்றும் குண்டம் பெரும் திருவிழா மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. கோவை காமாட்சிபுரி ஆதீனம் இரண்டாம் குரு மகா சன்னிதானம் சாக்த ஸ்ரீ பஞ்சலிங்கேஸ்வர ஸ்வாமிகள் தலைமையில் நடைபெற்ற மாபெரும் குண்டம் திருவிழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு குண்டத்தில் இறங்கி அம்மனை வழிபட்டனர். மேலும் 108 பால்குடங்கள், மகா சக்தி வேள்வி, பொங்கல் வைத்தல், மாரியம்மன் உற்சவம், மாவிளக்கு பூஜை, ஊஞ்சல் உற்சவம் என பல்வேறு வழிபாடுகளை நடத்தி வழிபட்டனர். மேலும் கலந்து கொண்ட அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# மதுக்கடையில் வாலிபர் மீது தாக்குதல்; பணம், நகை பறிப்பு!

**சேலம் ஜன 29–**

நாமக்கல் கொசவம்பட்டி பகுதியை சேர்ந்தவர் அருள்குமார் (40). இவர் சம்பவதன்று சென்னை செல்ல சேலம் ரயில் நிலையத்துக்கு வந்துள்ளார். அப்போது சூரமங்கலம் புதுரோடு பகுதியில் உள்ள டாஸ்மாக் கடைக்கு மது அருந்த சென்றுள்ளார். அங்கு மது அருந்தி கொண்டிருந்த அருள்குமாரிடம், 3 பேர் தகராறு செய்து தாக்கினர். அப்போது அருள்குமாரை மிரட்டி ஏடிஎம் கார்டை பறித்து கொண்டு ரூ.3 ஆயி ரத்தை எடுத்து கொண்ட னர்.

பின்னர், அவரது கழுத்தில் அணிந்திருந்த வெள்ளி செயினை பறித்து கொண்டு தப்பினர். இதுகுறித்து அருள்குமார் சூரமங்கலம் போலீசில் புகார் அளித்தார். அப்புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர். அதில், சூரமங்கலம் புதுரோட்டை சேர்ந்த ரவுடிகளான புலி (எ) புருஷோத்தமன் (30), அந்தோணிபுரத்தை சேர்ந்த சுகணேஷ் (43), சதீஷ்குமார் (47) ஆகியோர் அருள்குமாரை மிரட்டி பணம் பறித்தது தெரிந்தது. இதையடுத்து புருஷோத்தமன், சுகணேஷ் ஆகிய 2 பேரை போலீசார் கைது செய்தனர். தலைமறைவாக உள்ள சதீஷ்குமாரை தேடி வருகின்றனர்.

# ஓசோன் ஏர் ரெஃப்ரெஷ் தொழில்நுட்பத்துடன் வேர்ல்பூல் எக்ஸ்பர்ட் கேர் – ஆடைகளுக்கு புத்துயிர் தரும் புதிய வாஷிங் மெஷின்!

**கோயம்புத்தூர், ஜன.29**

வேர்ல்பூல் ஆஃப் இந்தியா லிமிடெட், ஓசோன் ஏர் ரெஃப்ரெஷ் தொழில்நுட்பம் கொண்ட தனது புதிய வேர்ல்பூல் எக்ஸ்பர்ட் கேர் வாஷிங் மெஷின்கள் அறிமுகப்படுத்தி, ஆடைகள் பராமரிப்பில் ஒரு புதிய மாற்றத்தை உருவாக்கியுள்ளது. இந்த நவீன தொழில்நுட்பம், தண்ணீர் அல்லதுடிடர்ஜென்ட் பயன்படுத்தாமல், ஆடைகளை புத்துணர்ச்சியுடன் வைத்திருக்க உதவுவதோடு, அவை சுருங்காமல் நிறம் மங்காமல் நீண்ட காலம் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்கிறது.



ஓசோன் ஏர் ரெஃப்ரெஷ் தொழில்நுட்பம், துணிகளில் இருக்கும் துர்நாற்றம், பாக்டீரியா மற்றும் அலர்ஜி ஏற்படுத்தும் கிருமிகளை 99.9% வரை நீக்கி, ஆடைகளை இயற்கையான முறையில் சுத்தமாகவும் வாசனையுடனும் மாற்றுகிறது. குறிப்பாக டிரைகிளீன் மட்டுமே செய்ய வேண்டிய மென்மையான மற்றும் விலையுயர்ந்த உடைகளையும் அடிக்கடி துவைக்க வேண்டிய அவசியமின்றி பாதுகாப்பாக பராமரிக்க இந்த தொழில்நுட்பம் உதவுகிறது. இந்த அறிமுகம் குறித்து வேர்ல்பூல் ஆப் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் மார்க்கெட்டிங் பிரிவு துணைத் தலைவர் திரு. நகுல் திவாரி கூறுகையில், “வாடிக்கையாளர்களின் உண்மையான தேவைகளைப் புரிந்து கொண்டு உருவாக்கப்பட்டது வேர்ல்பூல் எக்ஸ்பர்ட் கேர். ஆடைகள் சேதமடையாமல், புத்துணர்ச்சியுடன் நீண்ட காலம் பயன்படுத்தக்கூடிய தீர்வுகளை வழங்குவதன் மூலம், இந்திய குடும்பங்களின் அன்றாட வாழ்க்கையை எளிதாக்குவது எங்களின் நோக்கம்,” என்றார்.

# 9வது பெனாங்க் ரோட்ஷோ இந்தியாவில் சுற்றுலா மற்றும் வணிக நிகழ்வுகளை வலுப்படுத்துகிறது!



**சென்னை,ஜன.29**

'சிம்பிளி பினாங்', பினாங் மாநாடு மற்றும் கண்காட்சி (PCEB) இந்தியா 2026க்கான பெனாங்க் ரோட்ஷோவின் 9வது பதிப்பை நடத்துகிறது. ஜனவரி 19 முதல் 27 வரை மும்பை, நியூ டெல்லி, கொச்சி மற்றும் சென்னை ஆகிய நான்கு நகரங்களில் நடைபெறும் இந்த ரோட்ஷோ, 800க்கும் மேற்பட்ட தகுதியான வாங்குபவர்களும், 100க்கும் அதிகமான ஊடக பிரதிநிதிகளையும் இணைக்கிறது. ஓய்வு சுற்றுலா, கார்ப்பரேட், ஊக்கப் பயணங்கள் மற்றும் கூட்டங்கள் துறைகளில் முடிவெடுப்பாளர்களுடன் பெனாங்கு நேரடியாக இணைக்கும் முக்கிய மேடையாக இது விளங்குகிறது. 2025 நவம்பர் நிலவரப்படி, இந்தியாவில் இருந்து 42,367க்கும் மேற்பட்ட பயணிகள் பெனாங்கு சென்றடைந்துள்ளனர். இதன் மூலம், 2024ல் முதல் 10 இடங்களுக்குப் புறம்பாக இருந்த இந்தியா, தற்போது பினாங்கின் முக்கிய ஆறு சர்வதேச சந்தைகளில் ஒன்றாக உயர்ந்துள்ளது. மேலும், 31 டிசம்பர் 2026 வரை இந்தியர்களுக்கு வழங்கப்படும் விசா விலக்கு, சுற்றுலா மற்றும் வணிக நிகழ்வுகளுக்கான பயணத்தை எளிதாக்குகிறது. “இந்திய சந்தை பேங்கிற்கு மிக முக்கியமானதும் தொடர்ந்து வளர்ந்து கொண்டிருப்பது மான சந்தையாகும். Visit Malaysia Year 2026ஐ முன்னிட்டு, இத்தகைய ரோட் ஷோக்கள் சந்தை நம்பிக்கையை வலுப்படுத்தும், புதிய கூட்டாண்மைகளை உருவாக்கி, பெனாங்கு உலகளாவிய சுற்றுலா மற்றும் வணிக நிகழ்வுகளுக்கான முன்னணி தலமாக நிலைநிறுத்த உதவுகின்றன,” என்று PCEB பிரதிநிதி தெரிவித்துள்ளார்.



## ஏமப்பள்ளியில்

# அ.தி.மு.க. மாணவரணி சார்பில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக் கூட்டம்!

**திருச்செங்கோடு, ஜன:29–**

இந்தி எதிர்ப்பு போரில் உயிர் நீத்த தியாகிகள் நினைவாக மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நாமக்கல் மாவட்ட அஇஅதிமுக மாணவரணி சார்பில்ஏமப்பள்ளியில் நடைபெற்றது.கூட்டத்திற்கு மாவட்ட மாணவரணி செயலாளர்என்.பொன்னுசாமிதலைமை வகித்தார்.தெற்கு ஒன்றிய செயலாளர் அணிமூர்மோகன் அனைவரையும் வரவேற்றார், இதில் முன்னாள் அமைச்சர் சரோஜா, பரமத்தி சட்டமன்ற உறுப்பினர் சேகர், திருச்செங்கோடு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பொன். சரஸ்வதி, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.சிறப்பு அழைப்பாளராக நாமக்கல் மாவட்ட செயலாளரும்,குமாரபாளையம் சட்டமன்ற உறுப்பினருமானதங்கமணி கலந்துகொண்டு பேசியதாவது:–

எடப்பாடியார் தலைமையில் அதிமுக ஆட்சி அமைந்த உடன் ஆண்களுக்கும் இலவச பேருந்து பயணம் வழங்கப்படும்,100 நாள் வேலை வாய்ப்பு திட்டம் 150 நாளாக உயர்த்தப்படும். வீடு இல்லாத அனைவரும் வீடு பெறும் வகையில் அரசே அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படும். ஜெயலலிதா ஆட்சி காலத்தில் இருந்து திமுக ஆட்சியில் நிறுத்தப்பட்ட ரூ. 25,000 மானியத்துடன்கூடிய ஸ்கூட்டி வழங்கும் திட்டம் 5 லட்சம் பேருக்கு உயர்த்தி வழங்கப்படும்.நிறைவேற்ற முடிந்த திட்டங்களை மட்டுமே எடப்பாடி யார் வாக்குறுதிகளாக தந்துள்ளார்.

என்று கூறினார்.இக்கூட்டத்தில் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் சந்திரசேகர், மாணவர் அணி துணை செயலாளர் பழனி, இளம் பேச்சாளர் சேலம் மாலதி, தலைமைக் கழக பேச்சாளர் காவேரி ஆனந்த், வர்த்தக அணி செயலாளர் ராகாதமிழ்மணி, உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அம்மா பேரவை நிர்வாகிகள் மகளிர் அணியினர் இளைஞர் இளம்பெண்கள் பாசறையினர் எனசுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

## விண்ணப்பித்தவர்களில்

# தகுதியானவர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்க நடவடிக்கை!

### கிருஷ்ணகிரி கலெக்டர் தகவல்!!

**கிருஷ்ணகிரி,ஜன.29**

விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கலெக்டர் தினேஷ்குமார் கூறினார்.

77வது குடியரசு தின விழாவை முன்னிட்டு கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம் கொண்டேப்பள்ளி ஊராட்சியில் கிராம சபை கூட்டம் நடந்தது. இதற்கு கலெக்டர் தினேஷ்குமார் தலைமை தாங்கி பேசியதாவது:–

குடியரசு தின விழாவை முன்னிட்டு நமது மாவட்டத்தில் உள்ள 333 ஊராட்சிகளிலும் கிராம சபை கூட்டம் நடக்கிறது. இதில் ஊராட்சி நிர்வாக செலவினம் குறித்தும், தணிக்கை அறிக்கை குறித்தும் விவாதிக்கப்படுகிறது மேலும் திட்டங்கள் தொடர்பாகவும் விவாதிக்கப்படுகிறது.

கிராமங்களின் வளர்ச்சியில் முக்கியத்துவம கொண்ட தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு முதல்–அமைச்சர் வந்த போது 85 ஆயிரம் பேருக்கு வீட்டுமனை பட்டாக்களை வழங்கினார். 5 வருடங்களுக்கு மேல் ஆட்சேபனை இல்லா புறம்போக்கு நிலத்தில் குடியிருப்போர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு நகர்புறங்களில் வாழும் பொதுமக்களுக்கும் வீட்டு மனை பட்டா வழங்குகிறது. தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தான் அதிக அளவில் வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர் வகுப்பை சேர்ந்தவர்களுக்கும் வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டு வருகிறது. வீட்டுமனை பெற்றவர்களுக்கு வீடு கட்ட கலைஞர் கனவு இல்ல திட்டத்தின்கீழ் நிதியும், வீடுகளை பழுது பார்க்க நிதியும் வழங்கப்படுகிறது

முதியோர் உதவி தொகை வேண்டி விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்க நடவடிக்கைஎடுக்கப்படும்.கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 3 லட்சத்து 14 ஆயிரம் பேருக்கு முதற்கட்டமாக கலைஞர் மகளிர் உரிமை தொகை மாதம் ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது. இரண்டாம் கட்டமாக 45 ஆயிரம் நபர்களுக்கு கூடுதலாக என மொத்தம் 3,59,000 மகளிருக்கு மாதம் ரூ.1000 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது.

இதே போல உங்க கனவை சொல்லுங்க திட்டத்தை முதல்–அமைச்சர் தொடங்கி வைத்து கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வீடுகள் தோறும் கோரிக்கைகளை தன்னார்வலர்கள் கேட்டு வருகிறார்கள். அரசின் திட்டங்களை பொதுமக்கள் பெற்று பயன் அடைய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்ந்து வாக்காளர் தினத்தை முன்னிட்டு கலெக்டர் தலைமையில் வாக்காளர் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடந்தது. இதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் கவிதா, ஊராட்சிகள் உதவி இயக்குனர் மகாதேவன், தோட்டக் கலைத்துறை இணை இயக்குனர் இந்திரா உள்பட பலர் கலந்து கொண்டனர்.



# கணவன்-மனைவி தீக்குளித்து சாவு: இறப்புக்கு காரணமானவர் மீது நடவடிக்கை!

### சேலம் போலீசில் உறவினர்கள் மனு!!

**சேலம் ஜன 29 –**

சேலம் மாவட்டம் வேடுகத்தாம்பட்டி சங்கோதி வட்டம் பகுதியைச் சேர்ந்தவர் பழனிசாமி (47).

இவர் தனது தம்பி மற்றும் தம்பி மனைவி தற்கொலைக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி சேலம் மாநகர காவல் ஆணையாளர் அலுவலகம் முன்பாக 50க்கும் மேற்பட்ட பொது மக்களுடன் தமிழக வாழ்வுரிமைக் கட்சி மாநகர் மாவட்ட அமைப்புச் செயலாளர் செந்தில் தலைமையில் திரண்டு முற்றுகையிட்டு மனு அளித்தனர். அப்போது அவர்கள் கூறியதாவது, எனது தம்பியின் பெயர் தனபால் (46). அவரது மனைவி பெயர் பிரியா (29). இவர்களுக்கு மூன்று பெண் குழந்தையும் ஒரு ஆண் குழந்தையும் உள்ளது. இந்த நிலையில் பிரியாவிற்கும் அதே பகுதியை சேர்ந்த சுபாஷ் என்பவருக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டது. இதனால் அடிக்கடி தனியே செல்போனில் பேசி வந்தனர்.

இது தெரிய வந்து தனபால் பிரியாவிடம் கேள்வி எழுப்பிய போது தகராறு ஏற்பட்டது. இதில் இருவரும் உடலில் பெட்ரோல் ஊற்றி தற்கொலை செய்து கொண்டனர். இதில் பிரியா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். தனபால் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். ஆகவே தனபாலில் வாக்குமூலத்தின் அடிப்படையில்சுபாஷ்அவரது மனைவிகலைச்செல்வி மகன் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் பெற்றோர்களை இழந்து வாடும் மூன்று குழந்தைகளுக்கும் தமிழக அரசு உதவிட வேண்டும் என தெரிவித்தனர்.

# திருப்பூரில் நள்ளிரவில் 4 நிறுவனங்களின் பூட்டை உடைத்து துணிகர கொள்ளை!

## முகமூடி கொள்ளையர்கள் கைவரிசை!!

திருப்பூர்,ஜன.29

திருப்பூர் கல்லூரி சாலை அணைப்பாளையம் பகுதியில் செயல்பட்டு வரும் பின்னலாடை மற்றும் உப நிறுவனங்கள் என அடுத்தடுத்து 4 நிறுவனங்களின் பூட்டை உடைத்து கொள்ளை சம்பவம் நடைபெற்றுள்ளது.

வழக்கம் போல நிறுவனத்தில் பணிக்கு வந்த ஊழியர்கள் பனியன் நிறுவனத்தின் பூட்டு உடைக்கப்பட்டு இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்து உரிமையாளருக்கு தகவல் தெரிவித்தனர்.

மேலும் இதே போல அடுத்தடுத்த 3 நிறுவனங்களின் பூட்டுகள் உடைக்கப்பட்டுஉள்ளேபொருட்கள் சிதறி கிடந்தது. உள்ளே சென்று பார்த்தபோது ஒவ்வொரு நிறுவனத்திலும் வைக்கப்பட்டிருந்த பணம் மட்டும் திருடப்பட்டு இருப்பது தெரியவந்தது.



அந்த பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி., கேமராவில் பதிவாகியிருந்த காட்சிகளை ஆய்வு செய்தபோது அதில் முகமூடி அணிந்த 5 பேர் கொண்ட கொள்ளை கும்பல் கையில் இரும்பு ராடு, கத்தி உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களுடன் நள்ளிரவில் சுற்றித்திரிவதும் பின்னர் பூட்டுகளை உடைத்து கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டதும் தெரியவந்தது. இந்த சம்பவம் தொடர்பாக பின்னலாடை நிறுவன உரிமையாளர்கள் கொடுத்த புகாரின் பேரில் 15 வேலம்பாளையம் போலீசார் சி.சி.டி.வி., காட்சிகளை கைப்பற்றி விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

முகமூடி அணிந்த கொள்ளை கும்பல் கையில் ஆயுதங்களுடன் சுற்றித்திரியும் வீடியோ காட்சிகள் சமூகவலைதளங்களில் வெளியாகி பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

எனவே மிகப்பெரிய அசம்பாவித சம்பவங்கள் நடைபெறுவதற்கு முன்பு முகமூடி கொள்ளையர்களை கண்டுபிடிக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



திருப்பூரில் குப்பை சேகரிப்பின்போது கிடைத்த தங்கச் சங்கிலியை மீட்டு உரியவரிடம் ஒப்படைத்த தூய்மைப் பணியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழை திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் வழங்கினார்.



நெல்லை கிழக்கு மாவட்டம், பாளையங்கோட்டை ஒன்றியத்தை சேர்ந்த பாளை மத்திய,தெற்கு ஒன்றிய பகுதிகளைச் சார்ந்த அதிமுக, அமமுக நிர்வாகிகள், உறுப்பினர்கள் 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள், இளம் பெண்கள் கட்சியிலிருந்து விலகி பாளை மத்திய ஒன்றிய செயலாளர் போர்வெல் கணேசன், பாளை தெற்கு ஒன்றிய செயலாளர் சுபாஷ் தங்கபாண்டியன் ஆகியோர் ஏற்பாட்டில் வள்ளியூரில் அமைந்துள்ள நெல்லை கிழக்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் மாவட்ட திமுக பொறுப்பாளர் கிரகாம்பெல் முன்னிலையில் தங்களை திமுகவில் இணைந்தனர். திமுகவில் இணைந்த அனைவரையும் மாவட்ட திமுக பொறுப்பாளர் கிரகாம்பெல் கட்சி சால்வை அணிவித்து வரவேற்றார்.நிகழ்வில் திமுக நிர்வாகிகள் நாங்குநேரி மேற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.எஸ்.சுடலைக்கண்ணு, மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர்கள் அல்போன்ஸ், ஆதிபாண்டி மூலக்கரைப்பட்டி பேரூர் செயலாளர் எஸ்.எஸ்.கே. முருகையா, பணகுடி பேரூர் செயலாளர் தமிழ்வாணன் உட்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தேசிய மகளிர் கபடி போட்டியில்

# வெண்கலப் பதக்கம் வென்ற திருப்பூர் வீராங்கனைக்கு பாராட்டு!



திருப்பூர்,ஜன.29

தேசிய மகளிர் கபடி போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற தமிழக அணியில் இடம் பெற்றிருந்த திருப்பூர் வீராங்கனைக்கு மாவட்ட அமெச்சூர் கபடி கழகம் பாராட்டு தெரிவித்துள்ளது.

இந்தியப் பள்ளிகள் விளையாட்டு கூட்டமைப்பின் சார்பில் 19 வயதுக்குள்பட்டோருக்கான 69ஆவது தேசிய மகளிர் கபடி போட்டி இமாச்சலப் பிரதேசத்தில் நடைபெற்றது. அதில் தமிழக பெண்கள்அணி கலந்துகொண்டு வெண்கலப் பதக்கம் வென்றது. தமிழகத்துக்கு பெருமை சேர்த்த பெண்கள் அணிக்கும், அணியில் இடம்பெற்றிருந்த திருப்பூர் மாவட்ட கபடி கழக வீராங்கனை ஜன்யாஸ்ரீக்கும் மாவட்ட அமெச்சூர் கபடி கழகம் சார்பில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக மாணவி ஜன்யாஸ்ரீக்கும், தமிழக பெண்கள் அணிக்கும் பாராட்டு தெரிவிக்கும் வகையில் நடைபெற்ற விழாவில் திருப்பூர் மாவட்ட அமெச்சூர் கபடி கழகம் சார்பில் தலைமைப் புரவலர்கள் எம். சுப்பிரமணியம், மாநகராட்சி துணை மேயர் ஆர். பாலசுப்பிரமணியம், சேர்மன் வி.கே.முருகேசன், தமிழக கபடி கழகத்தின் பொருளாளரும், மாவட்டச் செயலாளருமான ஏ.சண்முகம், தலைவர் மனோகரன், பொருளாளர் ஆறுச்சாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர். மேலும், மாவட்ட கபடி கழக நிர்வாகிகள், நடுவர்கள், விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள், மாணவிக்கு பயிற்சி அளித்த உடற்கல்வி ஆசிரியர் செந்தில்குமார் ஆகியோருக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

# பாலக்கோட்டில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற தொகுதி மாவட்ட தலைமை அலுவலகம் திறப்பு விழா!



பாலக்கோடு,ஜன.29

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு பைபாஸ் சாலையில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற தொகுதி மாவட்ட தலைமை அலுவலகம் திறப்பு விழா மாவட்ட செயலாளர் ராஜகோபால் தலைமையில் நடந்தது.

ஒன்றிய செயலாளர் செல்லன் முன்னிலை வகித்தார். இதில் திமுக மகளிர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் மணிமேகலைவிஜயன் சிறப்பு அழைப்பாளராககலந்து கொண்டுரிப்பன்வெட்டி குத்துவிளக்கு ஏற்றி கட்சி அலுவலகத்தை திறந்து வைத்து இனிப்புக்களை வழங்கினார். நாடாளுமன்ற தொகுதி செயலாளர் கோட்டை கலைவாணன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியில் இளஞ் சிறுத்தை எழுச்சி பாசறை மாவட்ட துணை செயலாளர் செந்தமிழ், பொறுப்பாளர்கள் மணிவண்ணன்,ரஜினி, சிவக்குமார்,

பாலா , அருன்குமார், தமிழரசன், சிவக்குமார், தமிழ் தேசியம், மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர பொறுப்பாளர்கள் மற்றும் கட்சி தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

## 8 மாதமாக புதிய சாலை பணிகள் நிறுத்தம்:

# புறக்கணிக்க போவதாக அஸ்தம்பட்டி அருகே உள்ள டிவிஎஸ் நகர் காலனி மக்கள் தெரிவிப்பு

சேலம்,ஜன.29

சேலம் மாவட்டம் அஸ்தம்பட்டி அருகே உள்ள டிவிஎஸ் நகர் காலனி, கம்பத்தெரு பகுதியில், கடந்த எட்டு மாதத்திற்கு முன்பு புதிய சாலைகள் போடுவதற்காக, பழைய சாலைகள் பறிக்கப்பட்டு கற்கள் கொட்டப்பட்டன. பின்னர் நிர்வாக காரணங்களுக்காக 8 மாதமாக சாலை போடப்படாமல் பணிந்து நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் அப்பகுதியில் இருபுறமும் போடப்பட்ட கழிவுநீர் கால்வாய், சரிவர அமைக்காமல் பாதியிலேயேபணிகளைகைவிட்டதால், அப்பகுதியில் உள்ள வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவு நீர் சரியாக செல்ல முடியாமல் தேங்கி நிற்பதால் கடும் துர்நாற்றம் வீசி வருகிறது. மேலும் தேங்கிய கழிவு நீரில் புழுக்கள் உண்டாகி ஏராளமான கொசுக்கள் உருவாகி அப்பகுதியில் உள்ள மக்களுக்கு நோய் தொற்று ஏற்பட்டுள்ளது. மேலும் இது குறித்து அப்பகுதி கவுன்சிலரும், சேலம் மாநகராட்சி துணை மேயருமான சாரதா தேவியிடமும், அஸ்தம்பட்டி மண்டல குழு தலைவர் மற்றும் மாநகராட்சி நல



அலுவலர், மாநகராட்சி ஆணையாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் பலமுறைபுகார்மனுஅளித்தும்இதுவரை எவ்விதநடவடிக்கையும்எடுக்கவில்லை, மேலும் புகார் கொடுக்கும் தினத்தன்று மட்டும் பெயரளவிற்கு சுத்தம் செய்து விடுகின்றனர். பின்னர் மீண்டும் பழைய நிலைக்கு இருப்பதால் தங்களால் சுகாதாரத்தோடு வாழ முடியவில்லை என்றும், மக்கள் நலப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட அரசு பணம் என்ன ஆகிறது. எனவே இம்முறை தேர்தலை தங்கள் பகுதி மக்கள் புறக்கணிக்க போவதாக தெரிவித்துள்ளது சேலத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ஊட்டியில் வங்கி ஊழியர்கள் அடையாள வேலை நிறுத்தம்!

ஊட்டி,ஜன.29

வங்கிகளில் 2 மற்றும் 4 ஆவது சனிக்கிழமைகள் விடுமுறையாக உள்ள நிலையில் அனைத்து சனிக்கிழமைகளிலும் விடுமுறை அளிக்க வங்கி ஊழியர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இது தொடர்பாக வங்கி ஊழியர்கள் சம்மேளனத்துடன் மத்திய அரசு நடத்திய பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது. இதையடுத்து, நாடு முழுவதும் வங்கி ஊழியர்கள் வேலைநிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நீலகிரி மாவட்டத்தில் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப்போராட்டம் நடைபெற்றது. இதனால் உதகையில் 70 தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூடப்பட்டிருந்தன.

இந்த அடையாள வேலைநிறுத்தப்போராட்டத்தின் ஒரு பகுதியாக கோரிக்கையை வலியுறுத்தி உதகையில் உள்ள பாரத ஸ்டேட் வங்கி கிளை முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன. ஆர்ப்பாட்டத்துக்கு நீலகிரி மாவட்ட வங்கி ஊழியர்கள் சங்க பொதுச் செயலாளர் ராஜ்குமார் தலைமை தாங்கினார். ஸ்டேட் வங்கி அதிகாரிகள் சங்க செயலாளர் சேகர், கனரா வங்கி அதிகாரிகள் சங்க செயலாளர் கார்த்திக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



திருப்பூர் மாவட்டம் வடக்கு மாவட்ட தலைவராக செல்வகுமார் அகில இந்திய அமைப்புச் சாரா தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் காங்கிரஸ், மாநிலச் செயலாளர் வின் ஆர்.ஜே.பி பிரபு மாநில செயற்குழு உறுப்பினர் ராஜேஸ்வரி, திருப்பூர் தெற்கு மாவட்ட தலைவர் கண்ணபிரான் மற்றும் மாவட்டச் செயலாளர் ஜிகே மணி ஆகியோர்கள் நேரில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவித்தார்கள்.

# ஆற்றுத் திருவிழாவில் சிறுமியின் உயிரை காத்த காவலர்களுக்கு கடலூர் மாவட்ட எஸ்பி பாராட்டு!



கடலூர்,ஜன.29

கடலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தென்பெண்ணையாற்றின் கரையோரம் ஆற்றுத்திருவிழா ஜனவரி 19 வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. இதை முன்னிட்டு அதிகாலையில் இருந்தே அருகில் உள்ள கோவில்களில் இருந்து அலங்கரிக்கப்பட்ட சாமிகள் டிராக்டர், மினி லாரி போன்ற வாகனங்களில் வைத்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு, தென் பெண்ணையாற்றில் தீர்த்த வாரி நடந்தது. ஆற்றுத்திருவிழாவை காண ஆயிரக்கணக்கான பொதுமக்களும் தென்பெண்ணையாற்றின் கரையோரம் குவிந்தனர்.

ஆற்று திருவிழாவிற்கு வந்த 15 வயது சிறுமி மூச்சு திணறி தவித்துள்ளார். இதனைக் கண்ட போக்குவரத்து தலைமை காவலர் ராஜதீபன் சைபர் கிரைம் சைபர் தலைமை காவலர் தினேஷ் ஆகியோர்கள் சற்றும் தாமதிக்காமல், இருசக்கர வாகனத்தில் உடனடியாக

கடலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்து சிறுமியின் உயிரை காப்பாற்றியுள்ளனர். பணியின் போது சிறுமியின் உயிரை காப்பாற்றிய தலைமை காவலர்களை கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு S.ஜெயக்குமார் IPS அவர்கள் பொன்னாடை அணிவித்து பாராட்டினார்.

# பாலக்கோட்டில் கஞ்சா விற்ற வாலிபர் கைது!

பாலக்கோடு,ஜன.29

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு பகுதிகளில் கஞ்சா விற்பனை செய்வதாக பாலக்கோடு போலீசாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

அதனை தொடர்ந்து சப்இன்ஸ்பெக்டர் யுயல் மூர்த்தி மற்றும் போலீசார் நேற்று மாலை ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

பாலக்கோடு அடுத்த வேலாவள்ளி பாலம் அருகே சந்தேகபடும்படியாக நின்று கொண்டிருந்த வாலிபரை பிடித்து விசாரித்ததில் காரிமங்கலம் அடுத்த பொம்மஅள்ளியை சேர்ந்த சந்தோஷ் (19) என்பதும் பிளாஸ்டிக் கவரில் 100 கிராம் அளவிலான கஞ்சாவை சிறு சிறு பொட்டலங்களாககட்டிமறைத்து வைத்து விற்பனை செய்ததும் தெரிய வந்தது,

இதையடுத்து போலீசார் வாலிபரை கைது செய்து கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

தினமும் உள்ளாட்சி அரசு படியுங்கள்

## ஏ.டி.எம். மையத்தில் விட்டுச்சென்ற

# ரூ. 38 ஆயிரத்தை போலீசில் ஒப்படைத்த இளைஞர்கள்!

## அதிகாரி பாராட்டு!!



திருப்பூர்,ஜன.29

திருப்பூரில் ஏடிஎம் மையத்தில் தவறுதலாக விட்டுச்சென்ற ரூ.38,000, ஏடிஎம் அட்டையை கண்டெடுத்த இளைஞர்கள் அவற்றை போலீஸாரிடம் ஒப்படைத்தனர். இதுதொடர்பாக காவல் துறையினர் கூறியதாவது : திருப்பூர் மாநகர வடக்கு காவல் நிலைய எல்லைக்குள்பட்ட தனியார் மருத்துவமனை அருகே உள்ள ஏடிஎம் மையத்துக்கு ஆதித்ய சோழன் (20), சுரேந்திரன் (30), நாகேஸ்வரன்(42) ஆகிய 3 பேர் பணம் எடுக்கச் சென்றுள்ளனர். அப்போது, அங்கு இவர்களுக்கு முன்பு யாரோ பணத்தை எடுத்து தவறுதலாக ஏடிஎம் இயந்திரத்தின் மீது வைத்துச் சென்றுள்ளதை அறிந்தனர்.

இதையடுத்து, கேட்பாரற்று நிலையில் இருந்த ஏடிஎம் அட்டை மற்றும் ரூ.38,000 பணத்தை மீட்டு ஒப்படைப்பதற்காக திருப்பூர் மாநகர காவல் ஆணையர் அலுவலகத்துக்கு 3 பேரும் வந்தனர். அங்கு காவல் ஆணையரின் அறிவுறுத்தலின்பேரில் துணை ஆணையர் ராஜராஜனிடம் பணத்தை ஒப்படைத்தனர். இளைஞர்களின் நேர்மையான செயலை போலீஸார் பாராட்டினர்.

இதைத்தொடர்ந்து, தவறவிடப்பட்ட பணம், ஏடிஎம் அட்டையை மாநகர காவல் அலுவலகம் வந்து, அவற்றின் அடையாள குறியீட்டை தெரிவித்து பெற்றுச் செல்லலாம் என்று தெரிவிக்கப்பட்டது.